DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : MC 7/2024
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஷ்ணுஶ்ரீ |
| Father / Husband Name | லோகரஞ்சன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **24.04.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பிரபாகரன் என்பவரின் இல்லத்தில் தான் எதிர் மனுதாரரின் தாத்தா இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரபாகரன் என்பவருக்கும் எதிர் மனுதாரரரின் தந்தைக்கும் என்ன உறவு என்றால் பிரபாகரன் என்பவரின் மனைவியின் அண்ணன் தான் எதிர் மனுதாரரின் தந்தை ஆவார். மேற்படி பிரபாகரன் என்பவரின் மூலமாகதான் எதிர் மனுதாரரின் தந்தையை நாங்கள் திருமணத்திற்கு தொடர்பு கொண்டோம் என்றால் அவர்கள் தான் திருமணத்திற்காக எங்களிடம் பேசினார்கள்.கடந்த 2022 ம் வருடம் ஜீன் மாதம் முதல் வாரத்தில் எனது பெற்றோர்கள் தான் திருமணத்திற்காக எதிர் மனுதார் வீட்டில் சென்று பேசினார்கள் என்றால் சரிதான். எனது அக்கா தீபாபிரியாவின் திருமணத்தின் போது எடுத்த புகைப்படத்தை வாட்ஸ் ஏப்பில் பார்த்து தான் என்னை எதிர் மனுதாரரின் தந்தை திருமணத்திற்கு பேசினார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியவாறு நிச்சயதார்த்தம் நிரைவானவுடன் எதிர் மனுதாரர்கள் எங்களிடம் வரதட்சணை கேட்டு உண்மையில் கொடுமை படுத்தியிருந்தால் அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் அல்லது திருமணத்தை நிறுத்தியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர் மனுதாரர்கள் நிச்சயதார்த்தம் நடந்த உடன் வரதட்சணை கேட்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிச்சயதார்த்தம் நடந்த உடன் எதிர் மனுதாரர்கள் வரதட்சணை கேட்டதால் அது குறித்து வில்லியனூர், மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் மற்றும் புதுவை துணை நிலை ஆளுநரிடமும் புகார் கொடுத்த மனுவை நான் எதிர் மனுதாரர் மீது தாக்கல் செய்த DVC வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருமணம் நடந்து அக்டோபர் மாதம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புதுவை துணை நிலை ஆளுநர் மற்றும் வில்லியனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார்கள் எ.மசாஆ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** திருமணம் நடந்த அன்றே நானும் எதிர் மனுதாரரும் என் பெற்றோரின் வீட்டிற்கு வந்தோம் என்றால் சரிதான். அங்கு எத்தனை நாட்கள்

இருந்தோம் என்றால் 3 நாட்கள் இருந்தோம். திருமணம் நடந்து எனது பெற்றோரின் வீட்டிற்கு 10 முதல் 15 முறை வந்திருப்பேனா என்றால் இல்லை. 4 முறை வந்திருப்பேன். என் பெற்றோர் எதிர் மனுதாரர் வீட்டிற்கு எத்தனை முறை என்னை பார்க்க வந்தார்கள் என்றால் 2 முறை வந்தார்கள். திருமணம் நடந்த பிறகு என்னை பார்க்க எனது பெற்றோர் எதிர் மனுதாரர் வீட்டிற்கு 4 முதல் 5 முறை வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எனது பெற்றோர் என்னை சந்தித்த தருணங்களில் மேற்படி வரதட்சணை கேட்டது சம்மந்தமாக எனது பெற்றோர் எதிர் மனுதாரரை கடிந்து கொண்டதாகவோ அல்லது அவருக்கு அறிவுறை கூறியதாகவோ நான் தாக்கல் செய்துள்ள மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3. எதிர் மனுதாரர் வரதட்சணை கேட்டு என்னை எதுவும் கொடுமைபடுத்தவில்லை என்பதால் நான் எனது பெற்றோரிடம் அவர்களை சந்தித்தபோது நான் அது குறித்து எதுவும் கூறவில்லை என்பதால் தான் அவ்வாறு எதுவும் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரருடன் ஒன்றாக வாழ்ந்த போது அவர் என்னை நல்ல முறையில் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரரின் வீட்டில் இருந்தபோது எனது பிறந்தநாளை கொண்டாடினேனா என்றால் ஆமாம். மேற்படி பிறந்த நாளில் எனக்கு எதிர் மனுதாரர் ஒரு மோதிரம் எனக்கு அணிவித்தார் என்றால் சரிதான். எதிர் மனுதார் வீட்டில் இருந்தபோது இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் நான் PG DFCS படிப்புக்காக விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். புதுவை மாநிலம் இளநிலை எழுத்தர் பதவிக்கும் நான் விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். மேற்படி எதிர் மனுதாரர் என்னை நல்ல முறையில் கன்னியமாக பார்த்துக்கொண்டததால் தான் மேற்படி படிப்பு மற்றும் வேலைக்கு விண்ணப்பிக்க முடிந்தது என்றால் சரியல்ல. நான் மேற்படி படிப்பு மற்றும் வேலைக்கு சென்றால் வேறு யாருடனோ சென்று விடுவேன் என்று அவர் என் மீது சந்தேகப்பட்டார். நான் எதிர் மனுதாரர் சொல்லிதான் மேற்படி படிப்பு மற்றும் வேலைக்கு விண்ணப்பித்தேன் என்றாலும் வழக்கிற்கா பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது திருமணத்தின் போது சீதனமாக என் பெற்றோர் எனக்கு வழங்கியதாக சொல்லப்படும் 85 சவரன் நகைகள் எங்கு வாங்கினார்கள் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் புதுவை முதலமைச்சர், துணை நிலை ஆளுநர் மற்றும் எதிர் மனுதாரரின் தாயார் பணிபுரியும் அலுவலகத்தின் மேல் அதிகாரிக்கு அளித்த புகாரில் 81 சவரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதுவை வில்லியனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் அளித்த புகாரில் 82 சவரன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனக்கு சீர்வரிசையாக கொடுத்ததாக சொல்லப்படும் 85 சவரன் நகைகள் எவ்வாறு என் வசம் வந்தது என்பது குறித்து நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எனது தாயார் சேமித்து வைத்திருந்த நகைகளை எனக்கு சீர்வரிசையாக கொடுத்ததாக நான் சொல்லியுள்ளேன். நான் 24.09.2024 உயர் காவல் துறை தலைவர் அவர்களிடம் அளித்த புகாரில் சீர்வரிசையாக எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லப்படும் 82 சவரன் நகையானது எங்களுடைய பாரம்பரிய நகை என்று கூறியுள்ளதாலும் மேற்படி நகைகள் எனது அம்மா சேமித்து வைத்தது என்று கூறியுள்ளதால் உண்மையில் மேற்படி நகைகள் எவ்வாறு என் வசம் வந்தது என்றால் எனது பாட்டி எனது அம்மா ஆகியோர் சேமித்து வைத்திருந்த தங்க நாணையங்களை மாற்றியும் அவர்கள் வைத்திருந்த நகைகளையும் எனக்கு சீர்வரிசையாக கொடுத்தார்.

5. DV 3/2025 ல் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர் மனுதாரர் மற்றும் போலிசார் மேற்படி நகைகளை வாங்கியதற்கான ரசீதை சமர்ப்பிக்குமாறு கேட்டபோது மேற்படி நகைகள் எனது பெற்றோர் எனது சிறுவயதில் இருந்து சேமித்து வைத்த நகைகள் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது பெற்றோர் எனக்கு நான் சொல்வது போல் 85 சவரன் நகைகளை சீர்வரிசையாக கொடுக்கவில்லை என்பதால் தான் அதற்கான சரியான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ எதிர் மனுதாரருக்கு அல்லது அவரது பெற்றோருக்கோ மேற்படி எனக்கு சீர்வரிசையாக கொடுத்ததாக சொல்லப்படும் 85 சவரன் நகைகளின் விவரங்களினை தெளிவாக குறிப்பிட்டும் அதன் எடையை குறித்தும் நான் சொல்லவில்லை என்பதால் தான் அவ்வாறு எனது மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு தெரியும். மேற்படி எனக்கு சீர்வரிசையாக கொடுத்ததாக சொல்லப்படும் நகைகளை எதிர் மனுதார் அல்லது அவரது குடும்பத்தினரிடம் எப்போதாவது ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். மேற்படி விவரங்களை நான் தாக்கல் செய்த மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி நான் நகைகளை எதிர் மனுதாரர்களிடம் ஒப்படைக்கவில்லை என்பதால் தான் அது குறித்து எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சீதனமாக கொடுத்த நகைகளை எனது பெற்றோர் என்னை பார்க்க வரும்போது நான் அவர்களிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

6. 12.02.2023 ம் தேதி நான் எதிர் மனுதாரரின் வீட்டை விட்டு செல்லும் போது மீதம் இருந்த நகைகளுடன் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தாலி மட்டும் தான் அணிந்திருந்தேன். நான் திருமணத்திற்கு முன்பு என்ன வேலையில் இருந்தேன் என்றால் asta என்ற தனியார் நிறுவனத்தில் sales executive ஆக பணிபுரிந்தேன். 23.09.2022 ல் நான் எதிர் மனுதாரருக்கு அனுப்பிய wats app குறுஞ்செய்தியில் நான் பணிபுரிந்த நிறுவனத்தின் மார்கெட்டிங் மேனேஜரின் நடவடிக்கை எனக்கு பிடிக்காததால் நான் பணியில் இருந்து விலகுவதாக செய்தி அனுப்பியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது மனுவில் நான் பணிபுரிந்த வேலையை எதிர் மனுதாரர் சொல்லிதான் விட்டு வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் என்னை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கொடுமை படுத்தியதாக எனது மனுவில் சொல்லியதற்கு மருத்துவமனைக்கு நான் சென்றதற்கான ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எதிர் மனுதாரர் என்னை உடல் ரீதியாக கொடுமை படுத்தியதற்கான புகைப்படம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்படும் பட்சத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

7. எதிர் மனுதாரர் என்னை உண்மையில் உடல் ரீதியாக கொடுமை படுத்தியிருந்தால் உடனடியாக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. பெற்றோரிடம் சொன்னால் கவலைப்படுவார்கள் என்பதால் எங்களுக்குள் பேசி தீர்வு காணலாம் என்பதற்காக காத்திருந்தேன். நான் எதிர் மனுதாரர் மீது கொடுத்த புகார்கள் அனைத்தும் எதிர் மனுதாரர் என் மீது விவாகரத்து வழக்கு தொடரந்த பிறகு தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் போன் நம்பரையும் எனது குடும்பத்தாரின் போன் நம்பரையும் எதிர் மனுதாரர் மற்றும் அவரின் பெற்றோரும் பிளாக் செய்ததற்கான ஆவணம் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது call history ஐ தாக்கல் செய்தால் எதிர் மனுதாரரும் அவரது பெற்றோரும் எவ்வளவு முறை என்னை தொடர்பு கொண்டார்கள் என்ற விவரம் தெரியவரும் என்பதால் தான் மேற்படி

call history ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் எதிர் மனுதாரரும் செங்கல்பட்டு சமரச மையத்திற்கு சமரசத்திற்காக சென்றோம் என்றால் சரிதான். அப்போது எதிர் மனுதாரர் என்னை ஆபசமாகவும் அறுவருப்பாகவும் பேசியதாக சொன்ன வார்த்தைகளை குறிப்பிட்டு எனது பிரமணா வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8. மேற்படி சமரசத்தின் போது நான் எதிர் மனுதாரரை அடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர் எனது நடவடிக்கையை குறித்து தவறாக பேசியதால் அவரது சட்டையை மட்டும் தான் பிடித்தேன் அடிக்கவில்லை. எதிர் மனுதாரர் என்னுடன் வாழ முடியவில்லை என்று மனக்குமுறலுடன் பேசும் போது தான் நான் அவரை சட்டையை பிடித்து அடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் என் மீது மேற்படி சம்பவத்திற்காக கொடுத்த புகாரிலும் எனது influence ஐ பயன்படுத்தி மேல் நடவடிக்கையை நான் தவிர்த்து விட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பொது இடத்தில் எதிர் மனுதாரரை நான் கண்ணியகுறைவாக நடத்தினேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரும் அவரது பெற்றோரும் 25.02.2023 ம் தேதி என்னை என் வீட்டிற்கு வந்து ஒன்றாக வாழ அழைத்த விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் என்னை அழைக்க வரவில்லை. மிரட்டி சென்றார். மேற்படி எதிர் மனுதாரர் வந்து மிரட்டி சென்ற விவரத்தை நான் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிர் மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிது.)**